
# தன்னிலைச் சிந்தனை ஆய்வுப் பரிந்துரைத் திருவோலை

## இ.ம.இ. கொள்கை விளக்கத் துணை அறிக்கை

ஞானகுருவின் படைப்புக்கள்



அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,

**ஞானகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணைடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,123 வைகாசி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

# தமிழின மொழி மத விடுதலை இயக்கம்

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**
**தோற்றம்: கி.பி. 1772**

# "தன்னிலைச் சிந்தனை ஆய்வுப் பரிந்துரைத் திருவோலை"

**தலைவர்**
**குருமகாசன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**இராசிவட்ட நிறைவுடையார்**
**குவலய குருபீடம், குருதேவர், ஞானாச்சாரியார்,**
**இந்துமதத் தந்தை, அருட்கொடை வள்ளல்,**
**அருளாட்சி நாயகம், தத்துவ நாயகம்,**
**நான்குயுக நாயகம், நிறையக்ஞர்,**
**பரபிறம்மம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர்,**
**சுக்கிராச்சாரியார் தேவநிலை,**
**வியாழன் பகவான் தேவநிலை.**

**குறிப்பு:-** தமிழ் இன மொழி மத விடுதலை இயக்கங்களின் உறுப்பினர்களுக்கு மட்டும் வெளியிடப்பட்டது இது. இவ்வியக்க ஆர்வலர்களும், ஆதரவாளர்களும், விருப்பாளர்களும் இக்கருத்துகளைப் படித்து பார்த்து உணர்ந்து நாடெங்குமுள்ள தமிழ்ப் பற்றாளர்களிடம் எடுத்து இயம்புமாறு வேண்டுகின்றோம்.

தமிழ் இன மொழி மத விடுதலை இயக்கங்களின் "கொள்கை விளக்க ஏடு" அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. இவ்விரண்டையும் பற்றிய கருத்துகள் வரவேற்கப்படுகின்றன.

## தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள்

# தன்னிலைச் சிந்தனை ஆய்வுப் பரிந்துரைத் திருவோலை

**தலைவர்:**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

1) இன்றைக்கு நமது இந்து மறுமலர்ச்சி இயக்க நேரடி உறுப்பினர்களும்; இ.ம.இ.யின் உறுப்பினரல்லாது ஆதரவாளர்களாகவும், தொண்டர்களாகவும், ஏந்தாளர்களாகவும், தோன்றாத் துணைவர்களாகவும், ஆர்வலர்களாகவும் இருப்பவர்களும்; இ.ம.இ.யின் கீழ் இயங்கும் 1. அருட்பணி விரிவாக்கத் திட்டம், 2. கடவுளை வழிபடுவோர் கழகம், 3. உலக அருளாளர் திருச்சபை, 4. அருளுலக ஆர்வலர் கழகம், 5. உலக மத ஆய்வுக்குழு, 6. இந்திய தத்துவ பேரவை, 7. தமிழ்ப் பண்பாட்டு ஆராய்ச்சிக் கழகம், 8. இந்தியப் பண்பாட்டு ஆராய்ச்சிக் கழகம், 9. உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டு மன்றம், 10. தமிழ்மொழி வளவளர்ச்சிச் சங்கம், ... முதலிய (48) நாற்பத்தெட்டு வகையான (அமைப்புக்களிலும்), நிறுவன நிர்வாகங்களிலும் நேரடி உழைப்பும், மறைமுக உழைப்பும் நல்குபவர்களும்; மேற்படி அமைப்புக்களால் நன்மை அடைந்தவர்களுமாக..... எண்ணற்ற தரத்தினர், திரத்தினர், திறத்தினர்..... தமிழகமெங்கும் பரவலாக உருவாகி விட்டனர். முறையான, நிறைவான பருவ மழையில் எங்கும் பசுமையாகப் பயிரினங்கள் முளைத்துக் கிளைத்துச் செழித்துக் கொழுமையோடு குளுமையாக விளங்குவது போல்; நமது

கொள்கையையும், குறிக்கோளையும், செயல்திட்டங்களையும் தெரிந்து, புரிந்து, விரும்பி, ஏற்றுக் கொண்டவர்கள் தமிழகமெங்கும் பசுமையாக உருவாகி விட்டார்கள் என்றே இலக்கிய பாணியில் இதனை விளக்கிடலாம். இதுதான் இன்றைய நிலை.

2) நமது முழுநேர ஊழியர்களும், தீவிர செயல்வீரர்களும் அவரவருடைய வசதி வாய்ப்புக்களுக்கும், சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கும், பொருளுலக அருளுலக ஏட்டறிவுக்கும், பட்டறிவுக்கும் ஏற்பத் தங்களால் இயன்ற அளவு வட்டார எல்லை, வட்ட மாவட்ட எல்லை, மண்டல எல்லை, தமிழக எல்லை, தமிழக எல்லை கடந்து இந்தியத் துணைக்கண்ட மாநிலங்கள், இந்தியத் துணைக்கண்ட எல்லை கடந்த உலக நாடுகள்,..... என்று நமது இ.ம.இ.யையும், அதன் கீழுள்ள அனைத்து நிறுவன நிர்வாகங்களையும் வளர்க்கிறார்கள். நமது இயக்கக் கிளைகளும், செயல்திட்ட நிலையங்களும் பரவலாக உலக அளவில் அறிமுகமாகி வளரத் துவங்கி விட்டன. எனவேதான், **<u>உலகம் முழுவதுமுள்ள தமிழர்களை ஒன்றுதிரட்டவும்; ஒற்றுமைப்படுத்தவும், ஒருமைப்பாடு அடையச் செய்யவும்,</u>** ... பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறாரின் (கி.மு. 100 முதல் கி.பி. 150 வரை) அறிவிப்பின்படியும், செயல் திட்டத்தின்படியும் தமிழின விடுதலை இயக்கம், தமிழ்மொழி விடுதலை இயக்கம், தமிழர் மத விடுதலை இயக்கம் என்ற மூன்று அமைப்புகளும் விரைந்து உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றை **“பதினெண்சித்தர் மடம்”** தலைமை தாங்கி வழிநடத்தும்.

பொது மக்களிடையில் **‘இந்து’** என்ற சொல்லின்பால் கசப்பும், மறுப்பும், வெறுப்பும், எதிர்ப்பும், நம்பிக்கையின்மையும்..... கொண்டிருந்தவர்களெல்லாம் இம்மூன்று அமைப்புகளில் தங்கள் தங்களின் விருப்பத்துக்கேற்ற ஒன்றில் ஈடுபட்டு, நேரடியாகத்

தமிழின மறுமலர்ச்சிக்கும், வளவளர்ச்சிக்கும், ஆட்சிமீட்சிக்கும் உரிய ஆக்கப்பணிகளை நமது குருதேவர், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூரின் வழிகாட்டலையும், வழித்துணையையும், அரிய பெரிய சீரிய தலைமையையும் புரிந்து ஏற்றுச் செயல்பட முன்வரட்டும். இனியும் நமது நிறுவன நிர்வாகங்களைக் குறை கூறி ஒதுங்கியும், எதிர்த்தும், வெறுத்தும்..... செயல்படுபவர்கள் திருந்த வேண்டும். இல்லாவிட்டால் நமக்குக் கேடு செய்யாமலாவது இருத்தல் வேண்டும். அப்படியல்லாதவர்களைப் பற்றிக் கட்டாயமாக அப்பாவியான, ஏமாளியான, அறியாமை இருளில் தவிப்பவர்களான,..... நம் தாயக இன மக்களுக்கு விளக்கியேயாக வேண்டும்! விளக்கியேயாக வேண்டும்!! விளக்கியேயாக வேண்டும்!!!

3) இன்றைய நிலையில் நாம் நமது கொள்கை, குறிக்கோள், செயல்திட்டம் முதலியவைகளை விளக்கி பத்துப் பதினைந்து புத்தகங்களும், 'குருதேவர்' என்ற பெயரில் ஐம்பத்தோரு மாத அறிக்கைகளும், (412) நானூற்று பன்னிரண்டுக்கும் மேற்பட்ட வகைவகையான அறிவிக்கைகளும், (*ஒவ்வோர் அறிவிக்கையும் குறைந்தது (10,000) பத்தாயிரம் முதல் (5,00,000) ஐந்து இலட்சம் வரை அச்சடிக்கப்பட்டுள்ளன.*) அச்சடிக்கப்பட்டவுடன் தமிழகத்திலும், இந்திய மாநிலங்களிலும், உலகின் பல பகுதிகளிலும் உள்ள தமிழினத் தலைவர்கள், தமிழ்மொழித் தலைவர்கள், தமிழர் மதத் தலைவர்கள், தமிழின மொழி மதத் தொடர்புள்ள அனைத்து வகையான நிறுவன நிர்வாகங்கள், பொதுவாழ்வில் அறிமுகமான தமிழினப் பெரியார்கள், தமிழின மொழி மதம் கலை முதலியவை தொடர்பான நாளேடுகள், வார மலர்கள், மாத மலர்கள், பதிப்பகங்கள் முதலிய அனைத்துக்கும் அஞ்சல் செலவு செய்து தொடர்ந்து அனுப்பப்பட்டே வருகின்றன. ஆனால் இதுவரை யாராவது ஒரு மடாதிபதியோ! சன்னிதானமோ! ஆதினமோ! தம்பிரானோ! சாமியாரோ!

பூசாறியோ! சமுதாய கலை இலக்கியத் தொழில் துறைத் தலைவரோ! நாளேட்டு, வார மலர், மாத மலர் ஆசிரியரோ! எந்தப் பதிப்பாளரோ! இதுவரை இந்த குவலய குருபீடம், ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பதில் எழுதவே இல்லை,! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!!!! நன்றி கூட தெரிவிக்க வேண்டாம், நீங்கள் அனுப்பியவை வந்து சேர்ந்தன என்ற செய்தியையாவது தெரிவித்திருக்கிறார்களா என்றால் அதுகூட இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!!!! இதைப் பார்க்கும் போது தமிழினத்தின் மெய்யான மத நிறுவனங்களும், மதத் தலைவர்களும் சமாது ஆகி நெடுங்காலமாகி விட்டதோ! தமிழர் சமுதாயத்துக்கென உண்மையோடு உழைக்கும் தலைவர்கள் எல்லாம் எப்போதோ மாண்டு மடிந்து விட்டார்களோ! தமிழ்மொழிக்கென்று பற்றோடும், பாசத்தோடும், உரிமையுணர்வோடும், பெருமித உணர்வோடும் பாடுபடக் கூடிய பத்திரிகைகளும், பதிப்பகங்களும், நிறுவன நிர்வாகங்களும், தலைவர்களும், எழுத்தாளர்களும் வாழ்ந்த காலம் வரலாற்றில் மட்டும்தான் இருக்கிறதோ! என்றே வருந்த வேண்டியிருக்கின்றது.

4) தமிழ் மொழிக்காக, தமிழினத்துக்காக, தமிழர் மதத்துக்காகப் பல காலமாகத் தொடர்ந்து அச்சிட்டவை அனைத்தும் இப்படித் தொடர்ந்து இருட்டடிப்புக்கும், செயலின்மைக்கும், உரிய எப்பயனையும் விளைவிக்காமைக்கும் காரணம் என்ன? என்ன? என்னென்ன?!?!?! என்று வினாவெழுப்பிச் சிந்திப்பவர்களாகவே இருக்கின்றோம் இன்று இந்து மறுமலர்ச்சி இயக்கத்தினரும், அருட்பணி விரிவாக்கத் திட்டத்தினரும். எனவேதான் இந்தத் "*தன்னிலைச் சிந்தனை ஆய்வுப் பரிந்துரைத் திருவோலை*"யை இ.ம.இ.யின் தலைவரும், பதினெண் சித்தர் மடமும் பீடமும் ஆன குருதேவர் எழுதிட நேரிட்டுள்ளது!

இது பற்றி எல்லோரும் இத் திருவோலையைக் கண்டது முதலாவது கட்டாயமாகச் சிந்தித்து, அடுத்து நாம் என்னென்ன செய்ய வேண்டும்? ... நமது இயக்க நோக்கு, போக்கு, செயல், ... முதலியவைகளில் என்னென்ன மாற்றங்களைச் செய்ய வேண்டும்? ..... என்று தங்களின் கருத்துக்களைத் தலைமைப்பீடத்துக்கு எழுத வேண்டும். விரைந்து **'மாவட்ட நிர்வாகிகளின் ஆய்வுக் குழு'**, **'இயக்கச் செயல் சீரமைப்பு சிந்தனை வட்டம்'** என்ற இருபெரும் கூட்டங்கள் தலைமைப்பீடத்தில் நடக்க உள்ளன.

தமிழினம் மூவாயிரமாண்டுகளாக எல்லாத் துறைகளிலும் அடிமைப்பட்டு, மிடிமையுற்று, தன்னம்பிக்கையிழந்து, தாழ்ச்சியுற்றுக் கிடப்பதற்கு உண்மையிலேயே வருந்திப் பரிகாரம் தேட விரும்பும் நல்லவர்கள் அனைவரும் இந்தத் திருவோலைப்படி உடனே செயல்பட வேண்டும். முடிந்தவரை விரைவில் தலைமைப்பீடத்தின் அழைப்புக் கிடைத்தவுடன் சென்னை வந்து தங்கள் தங்களின் கருத்துக்களைத் தெரிவிக்கத் தயாராக இருங்கள்; அல்லது விரைந்து அவரவர் தங்களின் புதிய வடிவமைப்புக்களுக்கும், செயல்நிலைகளுக்குமான தங்களின் கருத்துகளைத் தெளிவாக எழுதித் தலைமைப் பீடத்திற்கு அனுப்ப வேண்டும்.

5) நமது இயக்கங்களில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் மட்டும் முறையாகவும், நிறைவாகவும் தயாரானால் போதும்; 'தமிழின மொழி மத விடுதலை' மிகமிக எளிய ஒன்றாகி விடும். அதற்காக நம்மவர்கள் இனிமேலாவது இதுவரை வெளிவந்துள்ள **இயக்கக் கொள்கை விளக்க மாத மலரான குருதேவர் அறிக்கை**யை ஒன்றுவிடாமல் பொறுப்பாகவும், பொறுமையாகவும் படித்துத் தெரிந்து, அறிந்து ஆராய்ந்து, புரிந்து, முழுமையாக உணர்ந்து செயல்படல் வேண்டும்.

இன்றைய நிலையில் ஆங்காங்கே சிலர் ஐம்பதுக்கு மேல் வெளிவந்திருக்கும் குருதேவர் அறிக்கையைப் படிக்காமலேயே "குருதேவர் இன்னும் நமக்கு நிறையச் சொல்லித் தரவேண்டும்"; "குருதேவர் அடிக்கடி சுற்றுப்பயணம் வரவேண்டும்"; "குருதேவர் நம்மில் பெரும்பாலானவர்களைத் தனித்தனியாக அழைத்து அவரவரின் சந்தேகங்கள் அகலும் வண்ணம் விளக்கம் தர வேண்டும்"; "இதுவரை அச்சிட்டுள்ளவற்றில் போதுமான செய்திகளும், விளக்கங்களும் இல்லை"; "குருதேவரின் கொள்கையும், குறிக்கோளும் நம்மில் பலருக்கும் இன்னும் புரியாமலிருப்பதற்கு என்ன செய்தார் குருதேவர்?"; ... என்றெல்லாம் பொறுப்பில்லாமல் கண்மூடித்தனமாக விமர்சனம் வழங்கிக் கொண்டே இருக்கின்றார்கள். இவர்களுக்காகக் குருதேவர் தகுந்த விளக்கம் வழங்கிச் சிந்தனையைத் தூண்டும் எண்ணத்தில்தான் இந்த "*தன்னிலைச் சிந்தனை ஆய்வுப் பரிந்துரைத் திருவோலை*"யை கண்டிப்பினை உணர்த்தும் வாசகங்கள் நிறைந்ததாக எழுதியுள்ளார்.

ஏனென்றால், இப்படித் தவறான விமர்சனங்களை வழங்குபவர்-களெல்லாம், இதுவரை எத்தனை மாத மலர்கள், தனி நூல்கள், அறிவிக்கைகள், ..... குருதேவரால் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன? என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாதவர்கள்தான். அதாவது எதையும் விசாரிக்காமல், இயக்கத்தின் நடவடிக்கைகளை அவ்வப்போது முழுமையாகத் தெரிந்து கொள்ளாமல், எந்த அச்சிட்ட வெளியீட்டையும் முழுமையாகப் படிக்காமல், தலைமைப்பீடத்துடன் தொடர்பே இல்லாமல், ... எப்போதாவது ஒருமுறை குருதேவரைச் சுற்றுப்பயணத்தில் கூட்டத்துக்கிடையில் சந்தித்து வணங்கியதோடு தங்களை இயக்கத்தின் மிகப் பெரிய பொறுப்புள்ளவர்கள் என்று கற்பனை செய்து கொள்ளும் அப்பாவிகள்தான் இப்படியெல்லாம் தப்பும் தவறுமாக விமர்சனங்களை வழங்குகிறார்கள்.

எனவே, இனிமேல் நம்மவர்கள் யார் நமது இயக்கத்தைக் குறை கூறினாலும் அவர்களிடம், “உனக்கு இதுவரை என்னென்ன மலர்கள்? எத்தனை அறிவிக்கைகள்? எவ்வளவு புத்தகங்கள்? அச்சாகி இருக்கின்றன என்று தெரியுமா? அவற்றில் எதெதைக் கண்ணால் பார்த்திருக்கின்றாய்? எத்தனையைத் தொட்டுப் பார்த்திருக்கின்றாய்? எத்தனையை அரைகுறையாக படித்திருக்கின்றாய்? எத்தனையை முழுமையாகப் படித்திருக்கின்றாய்? நீ படித்தவற்றில் உனக்கு புரிந்திருப்பது எவ்வளவு? உனக்குப் புரிந்ததைப் பிறரிடம் எடுத்துக் கூறிச் சரிதானா என்று தெரிந்து கொண்டாயா? இயக்கத்தில் எத்தனை பேர்கள் உனக்குத் தெரியும்? நமது வட்டாரம், வட்டம், மாவட்டம்..... என்ற அளவில் எத்தனை அருட்கோட்டங்கள், யாகசாலைகள், கிளை அலுவலகங்கள், உறுப்பினர்கள், தீவிரச் செயல்வீரர்கள், முழுநேரச் செயல்வீரர்கள் இருக்கின்றார்கள் என்ற விவரங்கள் உனக்குத் தெரியுமா? இந்த விவரங்கள் தமிழகம் முழுவதும் எந்த அளவில் உனக்குத் தெரியும்? குருதேவரை எத்தனை முறை சந்தித்திருக்கின்றாய்? குருதேவர் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணங்களை அடிக்கடி நிகழ்த்துவது தெரியுமா? குருதேவர் இரவுபகலாகப் பாடுபட்டுக் கைரேகை, பிறப்பியல் (சாதகம்), அருட்கணிப்பு ... வழங்கியும்; அருளூறு பூசனைப் பொருட்கள் (ஏந்தரீகத் தாந்தரீக மாந்தரீகச் சக்கரங்கள்) தயாரித்து வழங்கியும்; பொருளீட்டித்தான் அச்சிட்டு வெளியிடும் பணியையும், சுற்றுப்பயணங்களையும் நிகழ்த்துகிறார் என்பது உனக்குப் புரியுமா? குருதேவர் எத்தனை ஆயிரமாயிரம் அருளாளர்களை உருவாக்கி வருகிறார்; பாழடைந்த, இருளடைந்த, அருள் வற்றிப் போன வழிபாட்டு நிலையங்களையெல்லாம் (கோயில்கள்) புத்துயிர்ப்புச் செய்து வருகிறார் என்பது உனக்கு புரியுமா? கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம் ... உருவாக்கிப் பல்லாயிரக்கணக்கில் மக்களை அருள் ஊற்றுக்களாக மாறிட வழிவகை செய்து வருகிறார் என்பது உனக்கு புரியுமா? இதுவரை எத்தனை ஆயிரம் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் குருதேவரால் உருவாக்கப்பட்டு

உலகெங்கும் பொருளுலக அருளுலக இருளகற்றும் பணி நடத்தி வருகிறார் என்பது உனக்குத் தெரியுமா? நமது இந்து மறுமலர்ச்சி இயக்கம் யாரால்? எப்பொழுது? ஏன்? எதற்காக? எதைதை எதிர்பார்த்து முதன்முதல் இம்மண்ணுலகில் தோற்றுவிக்கப்பட்டது என்ற வரலாறு உனக்குத் தெரியுமா? இந்த இ.ம.இ.யின் கீழ் எத்தனை அமைப்புக்கள், என்னென்ன பணிக்காக உருவாக்கப்பட்டது என்ற விவரங்கள் உனக்குத் தெரியுமா? இரண்டாயிரம் ஆண்டுப் பழமையையுடைய இ.ம.இ.யை இன்றும் தமிழர்கள் தெரியாமல் இருப்பது ஏனென்று தெரியுமா? புரியுமா?.....” என்று வினாக்களை எழுப்பி ஒவ்வொருவரையும் சிந்தித்துப் பார்க்குமாறு செய்ய வேண்டும்.

அப்பொழுதுதான் சோம்பேறித்தனமாக எதையும் படிக்காமல், விசாரிக்காமல், ஆராயாமல், பயிற்சி செய்யாமல், பிறரோடு பழகித் தெரிய முயற்சிக்காமல்; இயக்கத்தையும், குருதேவரையும் மேம்போக்காகக் குறைகூறித் திரிபவர்களைத் திருத்த முடியும்! அவரவராகத் திருந்திடுமாறு செய்ய வேண்டும்; இல்லாவிட்டால், இந்தத் திண்ணைப் பேச்சுத் தீரர்களே நமது போதனைகளின் பயன்களையும், சாதனைகளின் பயன்களையும் உலகுணர முடியாமல் செல்லரிப்பது போல் சிதைத்துச் சீரழித்து விடுவார்கள்.

6) சிலர், ‘குருதேவர்’ அறிக்கையை ஏன் அரசில் பதிவு (Govt. Regn.) செய்யவில்லை? ... என்று வாய்வீரமாகக் கேள்வி கேட்கிறார்கள். உண்மையில் கடலலை போல் தொடர்ந்து அதற்காக முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அது தெரியாமல் குறை கூறித் திரியும் இவர்களில் யார் இப்பணியை முன்னின்று செய்து தர முன் வந்தாலும் அதற்கு ஆகக்கூடிய செலவுகளை தலைமைப்பீடம் செய்யத் தயாராகவே இருக்கிறது. யாராவது முன்வரத் தயாராக இருக்கிறார்களா?

7) “குருதேவர் அறிக்கை விலை அதிகமாக இருக்கிறது” என்று குறை கூறித் திரிபவர்கள் அதிகமாகவே இருக்கிறார்கள். உண்மையில் குருதேவர் அறிக்கை விலைக்கு விற்கப்படவில்லை, காணிக்கைக்கே அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. அதாவது குருதேவரால் நேரடியாகவோ! அல்லது இயக்கத்தவர் வழியாகவோ! நலமடைந்த நோயாளிகளும், பேயாளிகளும், அருட்கணிப்பு பெற்றவர்களும்தான் குருதேவர் அறிக்கைக்கு ஆண்டுச் சந்தாவைக் காணிக்கையாகக் கட்டிப் பெறுகிறார்கள். மற்றபடி நமது இயக்க உறுப்பினர்களிலேயே பெரும்பாலானவர்கள் இன்னும் சந்தாதாரராகாமல் பிறரிடமிருந்து இரவல் பெற்றுப் படிப்பவர்களாகத்தான் இருக்கிறார்கள். இதனால் மிகமிகக் குறைந்த அளவு அறிக்கைகளால்தான் காணிக்கையாகப் பணம் வருகிறது. இதுமட்டுமின்றி சுமார் இருநூறு மாத மலர்கள், தமிழகமெங்கும் உள்ள பதிப்பகங்கள், நாளேடுகள், வார, மாத மலர்கள், சமய சமுதாய அரசியல் கலை இலக்கியப் பெரியவர்கள், அதிகாரிகள் ... என்று பலருக்கும் **இனமாகவே** அனுப்புகிறோம்.

எனவேதான், மெய்யன்போடும், தமிழ்மொழிப் பற்றோடும், வாய்மைநிறைப் பத்தியோடும் குருதேவரைப் பார்க்க வருபவர்களிடம் **காணிக்கையாகப் பெறக்கூடிய** பணத்துக்குப் பதிலாக நமது **குருதேவர் அறிக்கையின் மாத மலர் தொகுப்புகளை முதன்மையாகவும், மற்ற நமது அச்சிட்ட புத்தகங்களை அவரவர் விருப்பப்படியும் வழங்கும் மரபு நமது தலைமைப் பீடத்தில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.** எனவேதான் நமது எந்த வெளியீட்டிலும் (புத்தகம், அறிக்கை, அறிவிக்கை)... **“விலை”** என்ற சொல்லைப் பயன்படுத்தாமல், **‘காணிக்கை’** என்ற சொல்லை மட்டுமே பயன்படுத்துகிறோம். அதாவது நமது புத்தகங்களை நமது இயக்கத்தவரிடம் கூடக் கட்டாயப்படுத்தி விற்பது நமது மரபல்ல! மரபல்ல!! மரபல்ல!!! மரபேயல்ல!!!! விருப்பமுள்ளவர்கள் காணிக்கையாக வழங்கும் பணத்திற்கு அருளூறு

பூசனைப் பொருட்களோடு அன்பளிப்பாக வழங்கப்படும் பரிசுப் பொருளாகத்தான் இருக்கின்றன நமது புத்தகங்களும், அறிக்கைகளும், அறிவிக்கைகளும்.....;

இவ்வளவு பெரிய பேருண்மையைத் தெரிந்தும் தெரியாதார் போல நமது இயக்க முன்னணிச் செயல்வீரர்களிலும், பொறுப்புள்ள வட்டார, வட்ட, மாவட்ட, மண்டல, மாநில, ... நிர்வாகிகளிலும் கூடச் சிலர், நமது வெளியீடுகள் அதிக விலையுள்ளனவாக இருக்கின்றன என்ற குறையைத் திரும்பத் திரும்ப நேரடியாகவும், முணுமுணுப்பாகவும் பேசி வருகிறார்கள். இது மாபெரும் தவறு, அனைவரும் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும். நமது வெளியீடுகளை பாதிவிலைக்கு விற்கத் தயாராகத்தானிருக்கிறது தலைமைப்பீடம். ஆனால் அவசர அவசரமாகக் காய்கறிகளைக் கூறு கட்டி விற்பது போல், நாம் சிரமப்பட்டு அச்சிட்டு வைத்திருப்பவைகளைப் படிப்பறிவோ! நமது கருத்துக்களைத் தெரிந்து கொள்ளும் ஆர்வமோ! இல்லாதவர்களிடம் விற்றுப் பணமாக்கிட வேண்டிய அவசியமில்லை நமக்கு! ஏனெனில் அவற்றை மீண்டும் அச்சடிப்பது எளிதல்ல.

**நாம் அச்சடித்து வைத்திருப்பவைதான் நமது பாசறைப் படைகள்,** நாம் எதிர்பார்க்கும் ‘கருத்துப் புரட்சியை’ (Ideological Revolution), சிந்தனைப் புரட்சியை (The Revolution in Thinking), பண்பாட்டுப் புரட்சியை (The Cultural Revolution), சமுதாய மறுமலர்ச்சியை (The Social Renaissance),..... உருவாக்கித் தரக்கூடிய ஆற்றல் மிக்க சாதனங்கள், செயல்வீரர்கள்,..... நமது அச்சிடப்பட்ட வெளியீடுகள்தான். எனவேதான் அவற்றை மிகவும் நிதானத்தோடும், நுட்பத்தோடும் திட்டமிட்டு செயலாக்க வேண்டும், அவை **விற்பனைக்குரிய உற்பத்திப் பொருட்கள் அல்ல. நமது படைப்புகள் விற்பனைச் சரக்குகளல்ல!**

8) நமது வெளியீடுகளை நம்மவர்கள் பொறுப்போடும், பொறுமையோடும் ஊன்றிப் படித்துக் குறிப்புகள் அவரவர் விருப்பத்துக்கேற்பத் தயாரித்துக் கொள்ள வேண்டும். நம்மவர்கள் இதுவரை வெளிவந்துள்ள வெளியீடுகளில் என்னென்ன கருத்துகள் எதெதில் கூறப்பட்டிருக்கின்றன என்று நன்கு நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்படிக் கொள்கைத் தெளிவும், வளமும், வலிவும் உடையவர்கள் நம்மிடையே பலராகிடல் வேண்டும். அப்படியல்லாமல் கண்மூடித்தனமாக 'எல்லாம் கூறிய செய்திகளே திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளன' என்று கூறி அலட்டிக் கொள்ளக் கூடாது. இதுவரை அறுபதுக்கு மேற்பட்ட நூல் வடிவ அறிக்கைகளும், நானூற்றுக்கும் மேற்பட்ட அறிவிக்கைகளும் அச்சாகியிருக்கின்றன. யாராவது தங்களுடைய விமர்சனத்தை மெய்ப்பிக்க இயலுமா?

9) 'குருதேவர்' அறிக்கை மாதாமாதம் வெளிவரக் கூடிய ஒன்று. ஆனால், போதிய பொருள்வசதி இல்லாததாலும், அச்சகத்தார் ஒத்துழைப்புக் கிடைக்காமையாலுமே இந்த அறிக்கை காலதாமதமாகவும், ஒரு சில மாதங்களின் இணைப்பாகவும் வெளி வருகின்றது. இந்த அறிக்கை ஒவ்வொரு தனிமனிதருக்கும் நேரடியாக அனுப்பப்படுகிறது. அதனால் அடிக்கடி சிலர் தங்களுக்கு அறிக்கை வந்து சேரவில்லை என்று குறை கூறுகிறார்கள். ஆனால் யாருமே தங்கள் தங்களுடைய வட்டாரத்துக்கு மொத்தமாகக் குருதேவர் அறிக்கைகளை வரவழைத்துத் தங்கள் வழியாக அனைவருக்கும் கிடைக்குமாறு செய்யத் தயாராக இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!!!! ... இப்படித்தான் நம்மில் எதையும் குறை கூறிடும் போக்குடைய ஒருவர் இருவர் எல்லா வட்டாரங்களிலும் இருந்து கொண்டு **இயக்கக் கட்டுப்பாடு, ஒழுங்கு, ஒரே தலைமையின் கீழ் செயல்படல்**, ஒற்றுமை, பற்று, பாசம், தோழமை, இணைந்து

செயல்படுதல் முதலிய நல்ல பண்புகள் வளரவிடாமல் கெடுக்கிறுர்கள்!?... தடுக்கிறுர்கள்.

<u>**குறிப்பு:**</u>

**(அ)** அவ்வப்போது, மேற்படி இயக்கத் தீய சத்திகளே, அறியாமைச் சத்திகளே, புரியாமைச் சத்திகளே, அப்பாவிச் சத்திகளே,..... குருவாணை வழங்கிக் கண்டித்துத் திருத்தும் பணிதான் இப்போது நிகழுகிறது. ஆனுல் <u>**திண்ணைப் பேச்சு வீரர்களாக**</u> வாழும் சிலர் இதற்காகவும் வருந்திப் புலம்பி, மறைமுகமாகத் தலைமைப் பீடத்தை விமர்சனம் செய்கிறுர்கள்??? இவர்கள் திருந்த வேண்டும்.

**(ஆ)** யாராக இருந்தாலும் தங்களின் குறையை, விமரிசனத்தை, திருத்தங்களே, மாற்றுத் திட்டங்களைத் தலைமைப் பீடத்திற்கு எழுதி அனுப்பலாம். அவற்றை உடனே ஏற்று ஆராய்ந்து தகுந்த முடிவுகள் உடனுக்குடன் எடுக்கப்படுமென்று உறுதி கூறப்படுகின்றது.

10) நம்மில் சிலர் குருதேவர் அறிக்கையில் பலருக்கும் பயன்படக்கூடிய ஆர்வமுள்ள பலவகைப்பட்ட செய்திகளும் வெளிவர வேண்டும் என்று ஓயாமல் பேசி வருகிறுர்கள், <u>**இவர்களிடமெல்லாம் நேரடியாகவே, பலமுறை**</u> 'உங்களின் விருப்பப்படி நீங்களே கட்டுரைகளே எழுதி அனுப்புங்கள், அல்லது உங்களுக்குத் தெரிந்த செய்திக் குறிப்புகளே எழுதி அனுப்புங்கள்; அவற்றை நாங்களே கட்டுரைகளாக்கி வெளியிடுகிறோம். அல்லது எதெதைப் பற்றிய கட்டுரைகள் வெளிவர வேண்டுமென்று விரும்புகிறீர்கள் என்பதை அவ்வப்போது சிறுசிறு குறிப்புகளாக எழுதி அனுப்புங்கள். அவற்றின் அடிப்படையில் விரைந்து செய்திகளைத் திரட்டிக் கட்டுரைகள் வெளியிடப்படும் ... என்று <u>மிகத் தெளிவாக வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டு விட்டன. ஆனுல் இவர்களில் ஒருவர் கூட, மருந்துக்குக் கூட, நமது குருதேவர் அறிக்கையில் வெளியிட</u>

ஒரு கட்டுரையோ! அல்லது ஒரே ஒரு குறிப்போ! அல்லது ஒரே ஒரு வேண்டுகோளோ! இன்றுவரை அனுப்பியதில்லை! அனுப்பியதில்லை!! அனுப்பியதில்லை!!! அனுப்பியதேயில்லை! ஆனால் இவர்கள்தான் வாய் ஓயாமல் வருவோர் போவோரிடம் எல்லாம் திரும்பத் திரும்பக் குறை கூறிக் கொண்டே இருக்கிறார்கள். இது இவர்களுடைய பழக்கமா? வியாதியா? புரியவில்லை. ஆனால் இப்பழக்கமோ! வியாதியோ! பிறருக்கும் பரவிடக் கூடாது என்பதற்காகத்தான் பல்வேறு அலுவல்களுக்கிடையில் குருதேவரே பேருந்திலும், இருப்புப்பாதை வண்டியிலும், மாலைநேர ஓய்விலுமாக .... நேரம் கிடைக்கும் போதெல்லாம் இந்த நெடிய பெரிய "*தன்னிலைச் சிந்தனை ஆய்வுப் பரிந்துரைத் திருவோலை*"யை எழுதியுள்ளார். எனவே இதனை நம்மவர்களில் யாரும் தங்களைப் புண்படுத்துவதற்காகவோ, அல்லது தங்களுக்கு நொண்டிச்சாக்குப் போக்குகளால் சமாதானம் கூறவோ .... கூறப்பட்டதாக எண்ணிட வேண்டாம்.

11) நம்மவர்கள் அண்மையில் சுற்றுப்பயணம் வந்த நமது தமிழ் இன மொழி மத விடுதலை இயக்கங்களின் பொதுச் செயலாளரும், எமது ஏற்புச் செல்வர்களுள் ஒருவரும், தாத்தா மதுரை பாண்டிமுனீசுவரரால் தொட்டு (முதுகில்) அருள் வழங்கப் பெற்ற முதல் மனிதரும், பரசுராமரின் திருத்தோன்றலாகத் தோன்றி-யுள்ளவர்களுள் சிறப்பாகப் பரசுராமராலேயே விரும்பி ஏற்றுப் பாதுகாக்கப்பட்டு வருபவருமான அருள்மிகு காரைக்குடி புதுப் பெரியவாள், ஆதிக்கொப்புடைய நாயகி சன்னிதானம் சித்தரடியார் இரா. முத்துராசமூர்த்தி அவர்கள் சென்ற இடமெல்லாம் மீண்டும் மீண்டும் **'பூசைகளைப் பற்றிய விருப்பு வெறுப்புக்களையும்', 'புரியாமைகளையும் அறியாமைகளையும்', 'தெரியாமைகளையும் விளங்காமைகளையும்', 'அச்ச கூச்ச மாச்சரியங்களையும்', 'தங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படாத ஏக்க எரிச்சல்களையும் குமுறல்களையும்',**

**‘சித்தி பெற்றவர்களிடம் ஏற்பட்ட தனிப்பட்ட போட்டி பொறாமை வெறுப்புகளையும்’**, ‘அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களின் **சித்தர் நெறியான சீவநெறி**யெனும் **இந்து மதத்**தைப் புரிந்து கொள்ளாமல் **தானென்ற வீம்பாலும், அகம்பாவத்தாலும், ஆணவத்தாலும் எதையும் எவரையும் ஏற்றுப் போற்றத் தெரியாமல் குறைகூறியே திரிபவரின் வம்புகளையும்’** ..... கேட்டுக் கேட்டு அலுத்துப் போக நேரிட்டுவிட்டது.

மிகுந்த சிந்தை உறுதியும், திரமும், திறமும், நெஞ்சத் தரமும், தெளிவும், வலிவும், உணர்வுத் திண்மையும், செயல் நுண்மையும், வன்மையும், உண்மையும் மிகுந்த மாபெரும் சித்தரடியார்களின் முன்னணி வரிசையில் ஒருவராகக் கருதப்படும் இந்தத் தமிழின மொழி மத விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் சித்தரடியார் இரா.முத்துராசமூர்த்தி இளைஞராக இருந்ததால்தான் மேற்படி விமர்சனங்களையெல்லாம் சாதாரணமாக ஏற்றுச் சமாளித்து வந்து சேர்ந்தார். எனவேதான் அவருடைய **‘சுற்றுப்பயண ஆய்வுக் கண்ணோட்டக் கருத்துரைகள்’** முறையாகவும், நிறைவாகவும் காய்தல் உவத்தலின்றி உரிய கால அளவு ஆராயப்பட்டு மிகமிகத் தெளிவான இந்த பதிலறிக்கை ‘*தன்னிலைச் சிந்தனை ஆய்வுப் பரிந்துரைத் திருவோலை*’ என்ற திருமடலாக **‘இந்து மறுமலர்ச்சி இயக்கக் கொள்கை விளக்கத் துணை அறிக்கையாக**வும்’ (The Supplementary Declaration of the I.M.I Manifesto), **‘தமிழ் இன மொழி மத விடுதலை இயக்கங்களின் கொள்கை விளக்க நிறைவுரை’**யாகவும் (The *Epilogue* of the T.I.M.M.V.I Manifesto) வெளிவருகின்றது. எல்லோரும் இதனைப் பொறுமையோடும், பொறுப்போடும் படித்துப் புரிந்து தங்களின் கருத்துகளை விரைந்து தலைமைப் பீடத்திற்கு எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நாம்;

அ) இந்து மறுமலர்ச்சி இயக்கம் இரண்டாயிரமாண்டுப் பழமையுடையது.

ஆ) இந்த இயக்கத்தில் எதுவுமே கட்டாயமில்லை.

இ) எவர் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் நேரடியாகப் பங்குபெறலாம். அதேபோல் எப்போது வேண்டுமானாலும் விலகியிருந்து செயல்படலாம்.

ஈ) எவராக இருந்தாலும் சரி, எக்காரணமாக இருந்தாலும் சரி, தலைமைப் பீடத்தையோ, இயக்கத்தையோ குறை கூறக் கூடாது, தங்களுக்கு விருப்பமில்லையென்றால், அடக்கமாக விலகிக் கொள்ளலாம், ஏனெனில், "நான்கு யுகங்களாக இருக்கும் இந்துமதம், இந்த நான்காவது யுகத்தில்தான் வீழ்ச்சியும், தாழ்ச்சியும், சிதைவும், சீரழிவும் அடைந்திருக்கிறது. இம்மாபெரும் பாதிப்பைச் சரி செய்து நலம் விளைவிக்கும் முயற்சி பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் முயன்றும் நிறைவு பெறாமல், இன்று பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், ஞானாச்சாரியார், குருதேவர், நான்குயுக நாயகம், நிறையக்ஞர், பரப்பிறம்மம், அருளாட்சி நாயகம், தத்துவ நாயகம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறாரால் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வருகிறது. இம்மண்ணுலகுக்குரிய நாற்பத்தெட்டுப் பதினெண்சித்தர் பீடாதிபதிகளிலேயே விண்ணையும் மண்ணையும் இணைக்கும் இராசிவட்ட நிறைவுடையார் இவர்தான். எனவே உலகியலாக இவருக்கு உதவிகளைச் செய்ய முடியாதவர்கள், இவருக்குத் துணையாக இருக்க முடியாதவர்கள், ... அன்புகூர்ந்து துரோகிகளாகவோ!, விரோதிகளாகவோ!! தொல்லை தருபவர்களாகவோ!!! ... செயல்பட வேண்டாம்! வேண்டாம்!!

வேண்டாம்!!! வேண்டவே வேண்டாம்!!!! ... அப்பொழுதுதான், இவர் காலத்திலாவது, ‘இந்து மதம் நலமும், வளமும், வலிவும், பொலிவும், ஆட்சிமீட்சியும் பெற்றிடும்!’; ‘தமிழினமும், மொழியும் உரிமையும், பெருமையும், ஆட்சிமீட்சியும் பெற்றிடும்!’; ‘உலக ஆன்மநேய ஒருமைப்பாடு உருவாகிடும்!’; ‘உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைந்திடும்!’; ‘உலக அருட்பேரரசு உருவாகும்!’; ‘அருளுலக மூலவர்களாகவும், காவலர்களாகவும், வாரிசுகளாகவும் தோற்றுவிக்கப்பட்ட தமிழர்கள் தன்மான உணர்வு, இனமான உணர்வு, மொழியுணர்வு, ஒற்றுமை உணர்வு.... முதலியவை பெற்று விடுதலை வாழ்வை அடைய முடியும்!’. எனவே யாராக இருந்தாலும் பொருளுலக அருளுலக இருளகன்றிட இ.ம.இ. வளர்ச்சிக்குப் பாடுபட முன்வாருங்கள். இல்லையேல், அடக்கமாக விலகிச் சென்று அமைதியாக இருங்கள்” என்று வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது

உ) தமிழர்களுக்குத் தங்களுடைய இனத்தாரை மதிக்கவோ, நம்பவோ தெரியவில்லை. பெரும்பாலான தமிழர்கள் அன்னியர்களைத்தான் மதிக்கிறார்கள், ஏற்றுப் போற்றுகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும், மாற்றப்பட்டேயாக வேண்டும். அதற்கு இ.ம.இ.யின் வளர்ச்சிதான் இன்றியமையாதது.

..... இப்பேருண்மைகளை எண்ணிப் பார்த்து நமக்குள் தமிழினத்தார்! தமிழ்மொழியார்! இந்து மதத்தார்! ..... என்ற அடிப்படையில் பற்றையும், பாசத்தையும், ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும், தலைமைக்குகீழ் அடக்கமாகச் செயல்படும் பண்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்! இதுவே வருங்காலத்தை ஒளிமிக்கதாகவும், வளம் மிகுந்ததாகவும் உருவாக்கிடும். எனவே தமிழர்கள் இப்பொழுது குருதேவரின் தலைமையில் ஒன்றுபட்டு ஒற்றுமையுடனும்,

ஒருமைப்பாட்டுடனும் கட்டுப்பாடாகச் செயல்பட்டு விடுதலையும், உரிமை வாழ்வும், ஆட்சி மீட்சியும், சமய சமுதாய அரசியல் கலை இலக்கியத் தொழில் துறை மறுமலர்ச்சியும் அடைந்திட்டால்தான் உண்டு; இல்லாவிட்டால், இனிமேல் எப்போதுமே தமிழர்களுக்கு விடிவே இல்லை.

[“... Now only the Tamils must get all the Reformations, Redemptions, Renaissances and Liberations from all the bindings of slavery and ignorance during the life time of His Holiness the XII Pathinen Siddhar Peedam. If not, these Tamils will never get freedom, independence, liberation and enfranchisement ....” - *Taken from the writings of Mr. M.Palanisami Pillai, His Holiness Siddhar Kaakkaiyar*] உயர்திரு அருள்மிகு சித்தர் காகபுசுண்டர் எனப்படும் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் [இ.ம.இ.க்குப் பரம்பரைப்படி இரண்டாவது தலைவராகப் பொறுப்பேற்றவர், காக்காவழியன் பண்ணையாடி, முடிகணம் எனப்படும் முடிகண்ட சோழபுரம், கரூர் வட்டம், திருச்சி மாவட்டம், சித்தர் ஏளனம்பட்டியாரின் மருமகன், இன்றைய குருதேவரின் தந்தை, உலகப் பகுத்தறிவுக் கழகம், உலக மதஆய்வுக் குழு.... முதலியவைகளுக்குத் தலைவர், தெலுங்கானுப் புரட்சியின் நாயகன், உலக மார்க்சீய மேதைகளில் இலெனினுக்கும், மாவோவிற்கும் அடுத்து மூன்ருவது இடத்தைப் பெற்றவர், முதன் முதல் உலக கம்யூனிச இயக்கம் (The International Communist Party) என்ற அமைப்பை வங்கத்து மார்க்சீய மேதை எம்.என்.ராயுடன் (M.N.Roy) சேர்ந்து அமைத்தவர், இந்திய மார்க்சீய அமைப்புகளுக்குத் தந்தை, இந்திய கம்யூனிசக் கட்சியின் நிறுவனர் (The Founder of the Indian Communist Party and the Father of all the Marxian Institutions.....)] மேற்கூறிய கருத்துகளை மிகத் தெளிவாக

இ.ம.இ. தொடர்பான எல்லாப் பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும் ஆழமாகவும், அழுத்தமாகவும் வெளியிட்டுள்ளார்.

12) “**இந்து** என்ற சொல் ஓர் உயர்தனிச் செந்தமிழ்ச் சொல்லேயாகும். இச்சொல்லைப் பிறமண்ணினரான ***பிருமணர்*** எனும் வடஆரியர்கள் தங்களுடைய சமசுக்கிருத மொழியில் உண்டாக்கப்பட்ட *ஹிந்து* என்ற சொல்லின் தமிழாக்கமே என்று தொடர்ந்து பொய் கூறி அனைவரையும் நம்ப வைத்து விட்டார்கள். அதாவது ‘ஒரு தாத்தாவின் பேரன்தான், அந்த தாத்தாவுக்கு இளமையில் கல்வி கற்றுக் கொடுத்த ஆசான்’ என்று கூறும் பித்துக்குளித்தனமான பொய்யைப் போன்றதே இது. நாலாவது யுகமான கலியுகத்தில் தமிழரின் இந்துமத இந்தியாவுக்கு வந்த பிருமணர் எனும் வடஆரியர்தான் நான்கு யுகமாக கூடி வாழும் தமிழருக்கு ***ஹிந்துமதம்*** என்ற மதத்தை வழங்கினார்கள். அதன்பிறகுதான்; தமிழர்கள் மதம் என்ற ஒன்றைப் பெற்றார்கள். அதுவரை தமிழர்கள் மதமே இல்லாமலிருந்தார்கள். அதாவது நாலாவது யுகத்தில் வந்த ***பிருமணர்*** எனப்படும் வடஆரியர்தான் தமிழர்களுக்கு ஆச்சாரியாராக, குருபீடமாக, சாத்திரியாராக, தோத்திரியாராக, ... இருந்து மதத்தை கற்றுக் கொடுத்தார்கள் என்று கூறுகிறார்கள் இன்றைய பொதுமக்கள். இந்தப் பித்துக்குளித்தனமான செய்தியை நமது அப்பாவித் தமிழர்களும் நம்புகிறார்கள். எனவேதான், இவர்களை நன்கு தெளிவு பெறச் செய்வதற்காக, யாமே, இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கீழ் தமிழின விடுதலை இயக்கம், தமிழ்மொழி விடுதலை இயக்கம், தமிழர் மத விடுதலை இயக்கம் என்ற மூன்று நிறுவன நிர்வாகங்களையும் உண்டாக்குகிறோம். இவற்றின் மூலம்தான் தமிழர்களை எல்லாவகையான வீழ்ச்சிகள், தாழ்ச்சிகள், பயனற்ற நிலைகள், அடிமை நிலைகள், அறியாமை நிலைகள் முதலியவைகளிலிருந்து விடுவிக்க முடியும்! விடுவிக்க முடியும்!!

விடுவிக்க முடியும்!!! இப்பேருண்மையினை இனி வரும் தமிழினப் பெரியோர்களும், பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் நன்கு புரிந்து செயல்பட வேண்டும்.”

- இந்தக் குருபாரம்பரிய வாசகங்கள் தாத்தா பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரார் (கி.மு.100 - கி.பி.150) அவர்களால் எழுதப்பட்டவை. இதனடிப்படையில்தான் மேற்படி **மூன்று இயக்கங்களை**யும் இன்றைய அவசர அவசியங்களை முன்னிட்டு தமிழின மொழி மத விடுதலை இயக்கம் என்று ஒரே ஓர் இயக்கமாக இணைத்துத் துவக்கியுள்ளார் குருதேவர். பொறுப்பாகப் பலர் கிடைத்தவுடன், இந்த இயக்கத்தைக் குருபாரம்பரிய வாசகப்படி, மூன்று தனித்த இயக்கங்களாக்கிக் குருதேவரின் தலைமையில் செயல்படச் செய்யப்படும். **‘இந்து’** என்ற சொல் பிடிக்காமல் நமது இயக்கத்தில் சேராதிருந்த தமிழர்கள் அனைவரும் இனிமேலாவது ‘தமிழினம்’, ‘தமிழ் மொழி’, ‘தமிழர் மதம்’ என்ற பெயர்களில் உள்ள இயக்கங்களில் பங்கு பெற்றுச் செயலாற்றிடப் பெருவாரியாக வர வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை நமது இயக்கத்தவர்கள்தான் மிகவும் சுறுசுறுப்புடனும், விறுவிறுப்புடனும் விரைந்து விரிந்த அளவில் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும்! செயல்படுத்த வேண்டும்!! செயல்படுத்த வேண்டும்!!! செயல்படுத்தியேயாக வேண்டும்!!!!

இனியும் இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்பது பிருமணரின் ஆதரவு இயக்கம், மடமை இயக்கம், மதவெறி இயக்கம், சாதி வெறிச் சார்பு இயக்கம், பிற்போக்கு இயக்கம், வடஆரியச் சமசுக்கிருத மொழியைப் பரப்பும் இயக்கம், தமிழரின் முன்னேற்றத்துக்குப் பயன்படாத இயக்கம் ... என்றெல்லாம் ஆராய்ச்சியில்லாமல் பேசித் திரிபவர்களுக்கு நம்மவர்கள் மிகமிகத்

தெளிவான நேரடியான... விளக்கங்களை வழங்கி அவர்களையும் நமது இயக்கத்தில் சேர்த்தேயாக வேண்டும். அதாவது தமிழின நலநாட்டம் உடையவர் 'தமிழின விடுதலை இயக்கத்திலும்', தமிழ் மொழியில் நலநாட்டம் உடையவர் 'தமிழ் மொழி விடுதலை இயக்கத்திலும்', தமிழர் மதத்தில் நலநாட்டம் உடையவர் 'தமிழர் மத விடுதலை இயக்கத்திலும்' .... முறையாகச் சேர்ந்து நிறைவாகப் பணியாற்ற முன்வரட்டும்! முன்வரட்டும்!! முன்வரட்டும்!!! முன்வருமாறு செய்யப்பட்டேயாக வேண்டும்!!!! இனியாவது அனுவசியமாகக் குறைகூறியே வீண்பொழுது போக்குவோர் குறையட்டும்! குறையட்டும்!! குறையட்டும்!!! குறைக்கப்படட்டும்!!!

13) சென்ற நூற்றுண்டில் பிறந்த மார்க்சீயம் இந்த நூற்றுண்டில் இப்புவிப் பரப்பின் பெரும்பகுதியில் வெற்றி பெற்றது. இந்த மார்க்சீயத் தத்துவம், 'ஆயுதப் புரட்சியின் மூலம் ஆட்சியைப் பிடிக்க வேண்டும். அதன் பிறகு அரசியல் சட்டங்களின் மூலமே பொருளாதாரச் சமத்துவமும்; முதலாளி தொழிலாளி என்ற வேற்றுமையற்ற சமத்துவமும்; விளைச்சல்களையும், உற்பத்திப் பொருள்களையும் அனைவரும் சமமாகத் தேவைக்கேற்பப் பங்கிட்டுக் கொள்ளும் பொதுவுடைமைச் சமத்துவமும் உடைய சமுதாயம் உருவாக்க வேண்டும்.....' என்ற செயல் சித்தாந்தத்தையே உடையது. இதன்படி மிகப் பெரிய இரசியா, சீனு, மிகச்சிறிய பர்மா, கொரியா, வியட்நாம், கியூபா, கிழக்குச் செர்மனி..... முதலிய நாடுகள் மார்க்சீயச் சித்தாந்தப்படியே ஆயுதப் புரட்சி செய்து ஆட்சியைப் பிடித்துப் பொதுவுடைமைச் சமத்துவச் சமுதாயம் அமைக்கும் பணியில் ஈடுபட்டன. அம்முயற்சியில் அதிவேகமான முன்னேற்றங்களையும், மிகப்பெரிய சாதனைகளையும் பெற்று வளர்ந்தன.

ஆனுல் அரை நூற்றுண்டுக் கால எல்லையிலேயே இம்மார்க்சீயத் தத்துவமும், சித்தாந்தமும் உருவாக்கிய அரசுகளும், சமுதாயங்களும்

ஆட்டங் கண்டு விட்டன. இப்பொழுது அனைத்து மார்க்சீய சிந்தனையாளர்களும், மேதைகளும், அறிஞர்களும், பேராசிரியர்களும், தலைவர்களும் .... அரும்பாடுபட்டு எப்படியாவது மார்க்சீயத்தின் பெயரால் அரசாங்கங்கள் சில இருந்திடுவதற்குரிய முயற்சிகளைச் செய்கிறார்கள். இதுதான் 'புரட்சிக்காரர்கள்', 'சீர்திருத்தவாதிகள்', 'புதுமை விரும்பிகள்', 'பழமையின் பகைவர்கள்', 'நாத்திகர்கள்', 'புத்துலகச் சிற்பிகள்', 'புதிய உலகு காண முயற்சிக்கும் சிந்தனையாளர்கள்', 'முன்னோர்களை முட்டாளாகக் கருதும் முற்போக்குவாதிகள்', ..... முதலிய அனைவரின் அகம்பாவப் போக்குகளையும், ஆணவ நோக்குகளையும், தான்தோன்றித்தனமான வெறுப்பு மறுப்பு ஏக்கங்களையும், கண்மூடித்தனமான புதுமைவெறிச் செயல்களையும் தடுத்து நிறுத்தியுள்ளது! தடுத்து நிறுத்தியுள்ளது!! தடுத்து நிறுத்தியுள்ளது!!! தடுத்தே நிறுத்தியுள்ளது.....!!!!

ஆனால் (43,73,089) நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூவாயிரத்து எண்பத்து ஒன்பது ஆண்டுகளாகியும் (*1988இல்*) எந்தத் தத்துவமோ! சித்தாந்தமோ! சமுதாய மாற்றமோ! அரசியல் வீழ்ச்சியோ! விஞ்ஞான சாதனையோ! ... தடுத்து நிறுத்த முடியாதபடி <u>பிறவாயாக்கை பெரியோரின் தலைமையில் இப்புவிப் பரப்பில் முதல் அருட்பேரரசை இளமுறியாக் கண்டத்தில் அமைத்து (கி.மு 41,71,101இல்) வெளியிட்ட பதினெண்சித்தர்களின் **சித்தர் நெறியான சீவநெறி** எனப்படும் **இந்து மதம்** இன்று வரை நின்று நிலவுகிறது! இன்று வரை நின்று நிலவுகிறது!! இன்று வரை நின்று நிலவுகிறது!!! இனிமேல் என்றென்றைக்கும் நின்று நிலவிடும்!</u> அதாவது **தமிழர்களுடைய மதமான இந்து மதம்**தான் அழிவில்லாமல் என்றென்றைக்கும் வாழ்ந்திடும்! வாழ்ந்திடும்!! வாழ்ந்திடும்!!!

இப்படிப்பட்ட இழிவழிவற்ற, ஈடுஇணையற்ற, உயரிய இந்து மதத்தின் தந்தையாகத் தோன்றியிருப்பவர்தான் நமது பன்னிரண்டாவது

பதினெண்சித்தர் பீடாதிபதி, அருளாட்சி நாயகம், ஞானாச்சாரியார், குவலய குருபீடம், தமிழின ஆச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள். இவருடைய முயற்சிகளால் விளைந்த அருளுலக வசதி வாய்ப்புக்களும், பயிற்சிகளும்தான் இன்றைக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கவல்ல பல்லாயிரக் கணக்கான சித்தரடியான்களையும், சித்தரடியாள்களையும், சித்தரடியார்களையும் தோற்றுவித்துள்ளன.

இவர்கள் இந்துமதத் தத்துவ வளவளர்ச்சியையும், சித்தாந்த வளவளர்ச்சியையும் தோற்றுவித்திடுவார்கள். அதன் மூலம் 'சமய மறுமலர்ச்சி', 'சமுதாய மறுமலர்ச்சி', 'மொழி மறுமலர்ச்சி', 'இலக்கிய மறுமலர்ச்சி', 'தொழில் மறுமலர்ச்சி', 'அரசியல் மறுமலர்ச்சி' ... என்று அனைத்து துறைகளிலும் மறுமலர்ச்சி செழிச்சியோடு ஏற்பட்டிடும். அதன்பிறகு, நாடு தழுவிய இன விழிச்சி! எழிச்சி!! கிளர்ச்சி!!! முதலியவை முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்து ஒரு 'முழுமைப் புரட்சி' (The Total Revolution) விளைந்திடும்! விளைந்திடும்!! விளைந்திடும்!!! இப்படி விளையும் முழுமைப் புரட்சி உறுதியாகப் பண்பாட்டுப் புரட்சியாகத்தான் (A Cultural Revolution) இருந்திடும்! இருந்திடும்!! இருந்திடும்!!!

எனவே நமது குருதேவர் அவர்கள் அருளாட்சி நாயகமாகவும், தத்துவ நாயகமாகவும் இருந்து விளைவிக்கும் பண்பாட்டுப் புரட்சியால் உருவாகப் போகும் 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்', 'உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டு அருட்பேரரசு' ஆகிய இரண்டும் என்றென்றும் வலிவோடும், பொலிவோடும், வாழ்வோடும், வளத்தோடும் நிலைத்து நின்றிடும்! நிலைத்து நின்றிடும்!! நிலைத்து நின்றிடும்!!!

14) இன்றைய நிலையில் நம்மவர்கள் நமது இயக்கம் காடுபோல் எங்கும் வளர்ச்சி பெற்று விட்டதை உணர வேண்டும். இந்தக்

காட்டிலுள்ள தேவையில்லாத மரங்களை அகற்றியும், ஆங்காங்கே சாலைகள் வேலிகள் அமைக்கத் தேவையான இடங்களிலுள்ள மரங்களை வெட்டிச் சீர்செய்தும், அழகுறுத்தியும் செம்மைப்படுத்திடல் வேண்டும். இல்லாவிட்டால், உட்புக முடியாமையால் பயனில்லாக் காடாகிடும். நமது நாட்டின் நிலை எந்தத் தமிழின உரிமை இயக்கமும் பயிராகிட முடியாத களர்மண் போல் இருந்து வருகிறது. இதில் நமது இயக்கம்தான் பசுமை நிறைந்த, அடர்த்தியான பல்வேறு வகையான பழ மரங்களும், மலர் மரங்களும், காட்டு மரங்களும் மிகுந்த காடாக மிக விரைவில் வளர்ந்து விட்டது.

அதாவது நாம் தமிழின மொழி மத உரிமைகளையும், பெருமைகளையும் காத்திடக் கூடிய உணர்வும், ஆர்வமும், தன்னம்பிக்கையும் உடையவர்களை உருவாக்கிட நம்மிடம் அறிமுகமான அனைவரையுமே அவருடைய குடும்பம், சுற்றம், பண்புநலன், கல்வி, கேள்வி, ..... முதலியவைகளை ஆராயாமல் அவரவர் விரும்பிக் கேட்ட கலைகளையும், அறிவியல்களையும் அருளியல் சார்ந்து கற்றுக் கொடுத்திட்டோம். அவர்களில் பெரும்பாலானவர்கள் சற்றும் எதிர்பாராத அளவில் மிகமிகப் பெரிய வளர்ச்சிகளை அடைந்து விட்டார்கள். <u>எனவே ‘கனிமலர்ச் சோலையாக உருவாக வேண்டிய நமது இயக்கம் கண்டகண்ட காட்டு மரங்கள் மிகுந்த காடாகவே வளர்ந்து விட்டது’</u>.

இப்பொழுதுதான் நாம், **வேகத்துடனும், விவேகத்துடனும்** செயல்பட்டுக் காட்டைத் திருத்தி கனிமலர்ச் சோலையாக்க வேண்டும். அதாவது தேவையில்லாத பயனற்ற மரங்களை அகற்றித் தேவையான மரங்களை மட்டும் வளரவிட்டுச் சோலையை உருவாக்குவது போல்; நம்மவர்களில் தேவையில்லாதவர்கள், பயனற்றவர்கள், முள்மரம் போன்றவர்கள், நச்சுமரம் போன்றவர்கள்..... எல்லாம் அகற்றப்பட்டேயாக வேண்டும். இதில் ஈவுஇரக்கமோ (அலட்சியமோ),

மெத்தனமோ, காலதாமதமோ, எச்சரிக்கையின்மையோ கூடாது! கூடாது!! கூடாது!!! கூடவே கூடாது!!!!.

எனவே, நாம் நமது கொள்கையில் பற்றோடும், பாசத்தோடும், பிடிப்போடும், உறுதியோடும் இருந்து செயல்பட வேண்டும். அதனால் நம்மிடையே உள்ள கூலிகளையும், காலிகளையும், போலிகளையும், அன்னியர்களின் கங்காணிகளையும், ஊசலாட்டக்காரர்களையும், மோசக்காரர்களையும், நாசக்காரர்களையும், துரோகிகளையும் முன்னெச்சரிக்கையுடன் நம்மிடமிருந்து களையெடுக்க வேண்டும். இந்தப் பணியில் எல்லோருமே அருட்கொடை வள்ளலுக்கு, அருளாட்சி நாயகத்துக்கு, தத்துவ நாயகத்துக்கு, நான்குயுக நாயகத்துக்கு, இந்துமதத் தந்தைக்கு, தமிழினக் குருபீடத்துக்கு, தமிழின ஆச்சாரியாருக்கு, தமிழினத்தை விடுவிக்க வந்திருக்கும் அருள்நாயகத்துக்கு, ஞானாச்சாரியாருக்கு, குவலய குருபீடத்துக்கு, இந்து மறுமலர்ச்சி இயக்கத் தலைவருக்கு, புரட்சித் தத்துவ வித்தகருக்கு, விடுதலைச் சித்தாந்த மேதைக்கு, அருட்பயிர் தழைக்க வந்த அருளுலகப் பருவமழைக்கு, நிறையக்ஞருக்கு, கருவறை மூலவர்களின் அம்மையப்பருக்கு, குருதேவருக்கு..... முழுமையான ஒத்துழைப்பை நிறைமனத்தோடு வழங்க வேண்டும்! வழங்க வேண்டும்!! வழங்க வேண்டும்!!! வழங்கியேயாக வேண்டும்!!!!

இம்மாபெரும் முயற்சி முழுமையான பயன்மிகு வெற்றி பெற்றிட வேண்டுமென்றால்; ஏறத்தாழ எல்லோருமே தங்களின் செயல் திட்டங்களையும், யார்யார் மீது எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டுமென்பதையும், எவரெவருக்கு எப்படியெப்படிப்பட்ட பாராட்டுகளையும், பதவிகளையும் நல்க வேண்டும் என்பதையும் நேரடியாகத் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும். அதுதான் மெய்யான தமிழினப் பற்று, மொழிப் பற்று, மதப் பற்று உடைய தமிழரின் கடமை! கடமை!! கடமை!!!

15) பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் சமுதாயவழிப் புரட்சியாலும் (Through the Social revolution), அரசியல் வழிப் புரட்சியாலும் (Through the Political revolution) '<u>மாபெரும் தமிழின அருட்பேரரசு</u>'களை ("The Great Divine Kingdoms of the Tamils were founded by the X and the XI Pathinen Siddhars peedam through the Social Revolution and the Political Revolution." - *Taken from the Writings of His Holiness Rev. Siddhar Kaakkaiyar M.Palanisami Pillai, The President of the I.M.I and The World Religious Research Society*) அமைத்திட்டார்கள்.

ஆனால், அவற்றை வாழையடி வாழையாகப் போற்றிப் பேணிப் பாதுகாத்திடக் கூடிய தரம், திறம், திரம், தீரம், வீரம், பொறுப்பு, பொறுமை, நாடு தழுவிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஒருங்கிணைக்கும் தன்னம்பிக்கை, இனமான உணர்வு, மொழியுரிமை உணர்வு,..... முதலியவை நமது தமிழர்களிடையே காலப்போக்கில் நலிந்தும், மெலிந்தும், சிதைந்தும், சீரழிந்தும் நோயுற்று விட்டன. எனவே தமிழர்கள் அற்பமான போட்டி, பொறாமை, அகம்பாவம், வம்பு, வீம்பு, வெறி, பேராசை, தன்னலம், போலி கௌரவம், பதவியாசை, புகழாசை, பொருளாசை, கூலி மனப்பான்மை, அடிமைச் சிந்தை ...... முதலியவற்றால் ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவுகளை வளர்த்துக் கொண்டு அன்னியர்களிடம் நமது இனம், மொழி, மதம் அனைத்தையும் காட்டிக் கொடுத்தும், அடகு வைத்தும், அடிமைப்படுத்தியும் தீராப் பழிகளையும், இழிவழிவுகளையும், தேடிக்கொடுத்து விட்டார்கள்! தேடிக்கொடுத்து விட்டார்கள்!! தேடிக்கொடுத்து விட்டார்கள்!!! தேடியே கொடுத்து விட்டார்கள்!!!!

எனவேதான் இன்று பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி மீண்டும் 'இந்து மத அருட்பேரரசை', 'தமிழின அருட்பேரரசை'

உருவாக்கும் பணியில் **'மதவழிப் புரட்சியால் அமையும் அருட்பேரரசே மக்களால் புரிந்து விரும்பி ஏற்றுப் போற்றி என்றென்றும் பாதுகாக்கப்பட்டிடும்'** எனப்படும் தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார், எனவே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், அருட்பணி விரிவாக்கத் திட்டத்தையுமே முழுமையாகத் துணையாக, வழியாக, சாதனமாகக் கொண்டு செயல்படுகிறார் நமது குருதேவர். ஆனால் மதவழிப் புரட்சியில் எண்ணற்ற சோதனைகளும், தோல்விகளும், துரோகங்களும், அப்பாவித்தனமான விரோதங்களும்தான் அதிகமாகுகின்றன. எனவேதான் இன்றைக்கு நமது குருதேவர் என்ன செய்கிறார்? நம்மவர்கள் என்னென்ன செய்கிறார்கள்? என்ற விவரங்கள் இந்த நெடிய ஆய்வுக் கட்டுரையில் விவரிக்கப்படுகின்றது. இதைப் படித்துத் தெரிந்த பிறகாவது நம்மவர்கள் தாங்கள் செய்வதன் விளைவு எப்படியெப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்த்திடுங்கள்; அப்படி எல்லோருமே எண்ணிப் பார்த்து செயல்படப் புறப்பட்டிட்டால்தான் தமிழினத்தின் வருங்காலமாவது உரிமையும், பெருமையும், உரிய வாழ்வும் பெற்றிடும்.

16) நம்மவர்களில் ஏறத்தாழ எல்லோருமே குருபாரம்பரிய மரபுப்படி உறுதிமொழி வழங்கியவர்கள்தான். ஆனால் அண்மைக் காலத்தில் குறிப்பிடத்தக்க சில முன்னிலைச் செயல்வீரர்கள் தங்களின் உறுதிமொழிகளை மறந்தும், துறந்தும், மறுத்தும், வெறுத்தும், எதிர்த்தும்..... செயல்பட ஆரம்பித்து விட்டார்கள். இதுதான் வியப்பு! வியப்பு!! வியப்பு!!! வேதனை! வேதனை!! வேதனை!!! அதாவது நம்மவர்கள் வழக்கப்படி வழங்கும் உறுதிமொழியில் உள்ள ஒருசில வாசகங்களை மட்டும் இங்கே குறிக்க விரும்புகின்றோம்:-

"…. நான், என் தாய் தந்தையின் பெயர்களையும், எத்தனையாவது குழந்தை என்பதையும், என் பெயரையும் கூறி அறிவு விழித்த நிலையில் வழங்கும் உறுதிமொழியே இது. யாருடைய அச்சுறுத்தலோ, இச்சகப் பேச்சோ … இன்றி நானே விரும்பித்தான் எனது உடல், பொருள், ஆவி, ஆன்மா, ஆருயிர், சொந்தம், பந்தம் … முதலிய அனைத்தையும் குருபீடத்துக்குக் காணிக்கையாக்குகின்றேன். நான் என்றென்றைக்கும் குருவை, குருவாணையை, குருவாணை பெற்றவர்களை, குருவின் வாரிசுகளை என் உயிரினும் மேலாக எண்ணிப் போற்றிப் பேணிப் பாதுகாப்பேன். நான் எக்காரணம் பற்றியும், பிறர் நமது இயக்கத்தையோ, குருபீடத்தையோ இழித்துப் பழித்துப் பேசுவதையோ, எதிர்த்து மறுத்துச் செயல்படுவதையோ அநுமதிக்க மாட்டேன். என் உயிரைக் கொடுத்தாவது குருபீடத்துக்கு இழிவோ, அழிவோ, பழியோ, எதிர்ப்போ, மறுப்போ, … ஏற்படாமல் தடுப்பேன். நான் மானுட வாழ்வுக்குரிய தாய்மை நிலை, துணைவி நிலை, மகவு நிலை, அடியான் நிலை, அடியாள் நிலை, அடியார் நிலை எனும் நிலைகளில் ஒன்றியும்; குருதேவருக்குள் நானும், எனக்குள் குருதேவரும் இருக்கும் நிலைகளை என்றென்றும் பசுமையாகக் காத்தும் செயல்படுவேன். நான் என்னையும் எனக்குரிய அனைத்தையும் குருபீடத்துக்கே முழுமையாக ஒப்புக் கொடுத்ததுடன்; எனக்குக் கிடைக்கக் கூடிய பத்தி, சத்தி, சித்தி, முத்தி, சித்து விளையாடல் எனும் ஐந்தையும் குருபீடத்தின் ஆணைக்குக் கட்டுப்பட்டே குருபீடத்தின் வழிகாட்டலின் படியே செயல்படுவேன். இது முக்காலமும் சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!! ….

நான் இந்த உறுதிமொழிகளிலிருந்து ஊசிமுனையளவு பிறழ்ந்தாலும், மீறினாலும் ஏழேழு பிறப்புக்களுக்கும் எல்லாவகையான தண்டனைகளையும் ஏற்றுக் கொள்ளுகின்றேன். ஏனெனில் நான்

அநுபவப் பூர்வமாக அருளுலகப் பேருண்மைகள் பலவற்றை அறிந்தும் புரிந்துமே குருபீடத்தில் பணிபுரிய வந்துள்ளேன். பொருளுலக, அருளுலக இருள்களையும், இன்னல்களையும் அகற்றும் குருபீடத்தின் அனைத்து வகையான கருத்துக்களையும், செயல்திட்டங்களையும் இரகசியமாகக் காத்துச் செயலாக்குவேன். எனக்குரிய பழம்பிறப்புகளையும், மறுபிறப்புகளையும் அறிவித்து என்னைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறேன். குருபீடத்தில் இட்டும், தொட்டும், சுட்டியும் வழங்கப்படும் அருளாற்றல்களை யாருக்கும் கேடுபயக்கும் வண்ணமாகப் பயன்படுத்தவே மாட்டேன். இது முக்காலமும் சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!! சத்தியமே!!!! ..... ....”

இந்தச் சில வாசகங்களைக் கொண்டே நமது சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் .... எப்படி யெப்படித் தெளிவும், உறுதியும், கட்டுப்பாடும், தலைமைக்குப் பணிந்தே செயல்படலும் .... உடையவர்களாகவே தயாரிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள் என்ற பேருண்மை விளங்கிடும். ஆனால் அண்மையில் சிலர் துரோகிகளாக, விரோதிகளாக, காட்டிக் கொடுப்பவர்களாக, சதிகாரரர்களாக, அன்னியரின் கங்காணிகளாக.... மாறினார்கள்!? மாறினார்கள்!?!? மாறினார்கள்!?!?!? .... என்பதுதான் சிந்தனைக்குரியது.

நமக்குக் கிடைக்கும் விடைகள் இருவகையாக இருக்கின்றன. ஒருவகை, நம்மவர்களின் தன்னலம், பேராசை, போட்டி, பொறாமை, அகம்பாவம், ஆணவம் ..... உடையவர்கள் **<u>தங்கள் நிலையிலிருந்து மாறியிருக்கிறார்கள்</u>**. மற்றொரு வகை நம் நாட்டில் எல்லாத் துறைகளிலுமே பெரும்பாலும் அன்னியர்களும், அவர்களின் மொழிகளும், பணங்களும்தான் தலைமையான இடங்களைப் பிடித்துக்கொண்டு சுரண்டலாட்சி, சூழ்ச்சிமிக்க சர்வாதிகார ஆட்சி, சாகசமிக்க அடிமைப்படுத்தும் ஆதிக்க வெறியாட்சி நடத்துகின்றன.

எனவே அவை, **<u>நம்மவர்களில் குறிப்பிட்ட அளவினரைத் தங்களின் நிலையிலிருந்து மாற்றியிருக்கின்றன</u>**. எனவே நாம் நம்மவர்களின் மனமாற்றங்களுக்கு மருந்து நல்க வேண்டும். அன்னியர்களின் தலையீடுகளுக்குத் தடை விதிக்க வேண்டும். அவ்வரிய பணியினை மிகமிக நுட்பத்துடனும், நன்கு திட்டமிட்டுமே செயலாக்க வேண்டும்.

அதற்காகத்தான் நம்மில் மாறியிருப்பவர்களையும், மாற்றப் பட்டிருப்பவர்களையும், <u>குறிப்பிட்ட காலம் நமது இயக்க நிறுவன நிர்வாகப் பணிகளில் நேரடியாக ஈடுபடாமல், ஆர்வலர்களாகவும், ஆதரவாளர்களாகவும், ஏந்தாளர்களாகவும், விருப்பாளர்களாகவும், .... குறிப்பிட்ட காலம் விலகி ஒதுங்கிச் செயல்படுமாறு குருவாணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.</u> இதனை யாருக்கும் விதிக்கப்பட்ட தண்டனையாக யாருமே எண்ணத் தேவையில்லை! தேவையில்லை!! தேவையில்லை!!! தேவையேயில்லை!!!! இதேபோல் நம்மில் சிலர் பல்வேறு காரணங்களைக் கற்பனையாகக் கற்பித்துக்கொண்டு இயக்க நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபடாமல் இருந்து வருகிறார்கள்; சிலர் தமது மனக்குறையை முணுமுணுப்பாகவும், தவறான விமர்சனமாகவும் வழங்குகிறார்கள். இவர்களுக்கும் இந்த ஆய்வுக் கட்டுரையிலேயே ஒரு வேண்டுகோள் விடுக்கிறோம்:-

> "…. இயக்கத்திடம் நம்பிக்கை நலிவும், விருப்பு மெலிவும், சந்தேகங்களும்,….. உடையவர்களே!… அன்பு கூர்ந்து உங்களின் குறைகள் அகலும் வரை இயக்கத்தை விட்டு சற்று விலகி ஒதுங்கி ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் …"

என்பதே இன்றைய வேண்டுகோளாகும். இதனால் நமது பணிகள் நல்ல வளமும், வலிவும், பொலிவும் பெற்றிடும்! பெற்றிடும்!! பெற்றிடும்!!! பெற்றே தீரும்!!!!

நாம் மிகமிக விரைவாகவும், விரிவாகவும் வளருகிறோம். நமது வளர்ச்சி கண்டு; பலரும் பொறாமைப்படவும், அச்சப்படவும்

ஆரம்பித்து விட்டார்கள். நாம் குறிப்பிடத்தக்க மிகப் பெரிய வளர்ச்சியை நாடு முழுவதும் பெற்று விட்டோம். அதனுல்தான் நமது இயக்கத்தில் சேருபவர்களும், விலகுபவர்களும், பதவிக்காகப் போட்டி பொருமையடைந்து செயல்படுபவர்களும்..... இப்போது நம்மிடையே அதிகமாகி விட்டார்கள். இது நமது வளர்ச்சியைத்தான் காட்டுகிறது. எனவே, நம்மவர்கள் நமது இயக்கத்திற்குள் நடைபெறும் சிறுசிறு பூசல்களேயும், சண்டை சச்சரவுகளேயும் பற்றி மிகுதியாகக் கவலேப்படாமல் நமது இயக்க வளர்ச்சியிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

இனிமேல் யாரும் எந்த விமர்சனத்தையும் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளக்கூடாது என்று தடைவிதிப்பதுடன்; எத்தகைய விமர்சனமாளுலும் உடனே நேரடியாகத் தலேமைப்பீடத்திற்கு அனுப்பித் தக்க விளக்கங்களேப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அநுமதியும் வழங்கப்படுகிறது! இதுவே நமக்கு வளவளர்ச்சியையும், ஆட்சி மீட்சியையும் வழங்கிடும்! வழங்கிடும்!! வழங்கிடும்!!!

**ஒன்றுதிரண்டிடுவோமாக!**
**ஒற்றுமையுற்றிடுவோமாக!**
**ஒருமைப்பாடு பெற்றிடுவோமாக!**
**ஒருங்கிணேந்த முயற்சியால் வெற்றியுறுவோமாக!**

**தமிழின விடுதலேயே உலக இனங்களின் விடுதலே!**
**தமிழ்மொழி விடுதலேயே உலக மொழிகளின் விடுதலே!**
**தமிழர் மத விடுதலேயே உலக மதங்களின் விடுதலே!**

**என்றென்றும் தமிழர்களே அருளுலக மூலவர்களாவோம்!**
**காவலர்களாவோம்!**
**தமிழினமே உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை**
**உருவாக்கட்டும்!**

தமிழினமே உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவ
பொதுவுடைமை கூட்டுறவுச் சமுதாயத்தை அமைக்கட்டும்!
தமிழினமே அருளுலக பொருளுலக இருளகற்றட்டும்!
தமிழினமே அருட்பயிர்களுக்கு நாற்றுப் பண்ணையாகட்டும்!
தமிழினமே அருட்தத்துவங்களுக்கு விதைப் பண்ணையாகட்டும்!
விண்ணையும், மண்ணையும் இணைக்கும் பணியை இராசிவட்ட
நிறைவுடையார் வெற்றியாக்கிட அனைவரும் உதவட்டும்!

உலக ஒற்றுமை வளரட்டும்!
உலக அமைதி செழிக்கட்டும்!
உலகச் சமாதானம் வெற்றி பெறட்டும்!
ஓம் திருச்சிற்றம்பலம்!

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

அரஅற மகாதேவப் பாதமே போற்றி!
அரஅற நமப்பார்வதி பாதமே போற்றி!

ஓம் அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி!
ஓம் தனிப்பெரும்கருணை! அருட்பெருஞ்சோதி!

எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே!
எல்லாம் வல்லான் தனையே ஏத்து!

“தன்னையறியும் அறிவே மெய்யறிவு
பின்னையறிவு பேயறிவு”

**ஓம்!**
**அன்பே சிவம்!**

# அன்பு
# குருபீடம்

தலைமைப்பீடம்,
இந்து மறுமலர்ச்சி இயக்கம்,
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடம்,
பதினெண்சித்தர் மடம்,
குருமகாசன்னிதானம், குருதேவர், ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்,
ESI மருந்தகம், செம்பியம், சென்னை 600011.

கண்ணதேவன் பிறந்த நாளான ஆவணி 18ஆம் நாள் சனிக்கிழமை - 43,73,089 ஆம் இந்து மத ஆண்டு விவர ஆண்டு 3-9-1988 நிறைவு பெறுகிறது.

பரப்பிறம்மம், நான்குயுக நாயகம், நிறையக்ஞர்,
கருவறை மூலவர்களின் அம்மையப்பர்,
அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
அருளாட்சி நாயகம், அருட்கொடை வள்ளல்,
**அன்பு / சித்தர்.**
3-9-1988.

<u>தொடர்பு:-</u>

1) ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்,
தலைவர், இந்து மறுமலர்ச்சி இயக்கம்,
ESI மருத்துவர் குடியிருப்பு, செம்பியம், சென்னை 600011.

2) தலைமைப்பீட செயலகம், பதினெண் சித்தர் மடம்,
8, விசயலக்குமி நகர், கொளத்தூர்,
சென்னை-600099.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: தட்டச்சு நகலாகக் கிடைத்தது. இடையிடையே ஆங்கில எழுத்துக்களும், தலைப்புப் பக்கமும் சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்தன. முழுவதும் கையெழுத்திலேயே எழுதப்பட்ட கையெழுத்துப் பிறதி நகல்கள் ஏதும் கிடைக்கவில்லை. கிடைத்த ஒரே ஒரு கையெழுத்துப் பிறதி நகலிலும் மொத்தம் 30 பக்கங்கள் கொண்ட நகலில் இறுதி 10 பக்கங்கள் மட்டுமே கிடைத்தன.//**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the
Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609
at Sri Vignesh Printers, Madurai.





மெய்ஞ்ஞானக்கொடி



தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில்
சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம்,
கொடிய தீட்டு, நெடிய சாபம்."
- குருபாரம்பரிய வாசகம்.

https://newsletters.gurudevar.org https://books.gurudevar.org
https://gurudevar.in https://gurudevar.org
https://induism.org Email: indhuism@gmail.com

காணிக்கை: ரூ.10/-